செ.வெ.எண்:04 நாள்:04.12.2019

**கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் - ஊரக உள்ளாட்சி தேர்தல் குறித்து தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான் பணிகள் குறித்த பயிற்சி, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (04.12.2019) நடைபெற்றது.**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரக உள்ளாட்சி தேர்தல் குறித்து தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான பணிகள் குறித்த பயிற்சி, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (04.12.2019) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 1994-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் கூட்டம், 1995 - ம் ஆண்டும் ஊராட்சி (தேர்தல்கள்) விதிகள், மாநில தேர்தல் ஆணையத்தால் அவ்வப்போது வெளியிடப்படும். சட்டப்பூர்வ ஆணைகள் மற்றும் அறிவுரைகள் மற்றும் சுற்றறிக்கைகளை நன்கு தெரிந்து கொண்டு கடைபிடிக்க வேண்டும்.

கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர், கிராம ஊராட்சித்தலைவர், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், மாவட்ட வார்டு உறுப்பினர் ஆகிய பணியிடங்களுக்கு வேட்புமனு தாக்கல் செய்யும் பொழுது அரசு நிர்ணயித்த கட்டணத்தை பெற்றுக் கொண்டு உரிய பதிவேட்டில் எழுதி பராமரிக்க வேண்டும். தேர்தல் விதிமுறைகள் குறித்த சந்தேகங்களை தேர்தல் நடத்தும் அலுவலர் / உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் வேட்பு மனுதாரர்களுக்கு நிவர்த்தி செய்ய வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிக்கு ஒருவர் வேட்புமனு செய்திருந்தால் உரிய விதியின்படி ஒரு மனுவை மட்டும் ஏற்றுக்கொள்ள வேண்டும். மற்றவை உரிய காரணங்களுடன் தள்ளுபடி செய்ய வேண்டும். வேட்பு மனுவில் பெயர் பிழை, வார்டு எண் (அ) பாகம் எண் பிழை இருந்தால் உறுதிபடுத்திக் கொண்டு அதனை ஏற்றுக் கொள்ளலாம். அதிகாரிகள் நடுநிலையோடு செயல்பட வேண்டும். தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை செவ்வனே செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சு.பிரபாகர் இ.ஆ.ப., அவர்கள் வலியுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பெரியசாமி, மாவட்ட ஆட்சியர் நேர் முக உதவியாளர் ( தேர்தல் ) திரு.எஸ்.கமலகண்ணன், மற்றும் உதவி இயக்குநர்கள், துணை ஆட்சியர்கள் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கிருஷ்ணகிரி.**